# மலையக மக்களின் பண்பாட்டுப் பெட்டகமாக நிமிர்ந்த மலையகத் தமிழ் இலக்கியங்கள் (தேர்ந்தெடுக்கப்பட்ட மலையகச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

சி.ரஞ்சிதா[1], ஆ.சசிகலா[2]
[1]தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
[2]புவியியற்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

ஒவ்வொரு சமூகமும் தனக்கென ஒரு தனித்துவமான வாழ்க்கை முறையை கொண்டு விளங்குகின்றது. இவ் வாழ்க்கைமுறை அந்தந்த சமூகங்களுக்குரிய பண்பாட்டின் அடையாளங்களாகவும் வெளிப்படுகின்றன. குறிப்பிட்ட மக்கட் சமூகத்துடன் ஒன்றி வாழும்போது அவர்தம் பண்பாட்டை எவ்வளவு தூரம் அறிய முடியுமோ அது போல குறிப்பிட்ட சமூகத்தின் வெளிப்பாடான இலக்கியங்களைக் கொண்டும் அறிய முடியும். இதற்கு மலையக இலக்கியங்களும் விதிவிலக்கல்ல. பெருந்தோட்ட உற்பத்திக்காக பிரித்தானியரால் அழைத்துவரப்பட்ட இம்மக்கட் சமூகம் தென்னிந்திய கிராமியச் சூழலிருந்து விடுபட்டு, மலைநாட்டுப்பகுதிகளிலில் வாழும் நிலை நேரிட்டது. இவர்கள் மத்தியில் விரவி காணப்படும் பண்பாட்டு கூறுகள் இலங்கையில் வாழும் ஏனைய தமிழ்ச் சமூகங்களுடன் ஒப்பிடும்போது சில வகையில் ஒன்றுபட்டும், பல வகையில் தனித்துவமுடையதாகவும் விளங்குகின்றது. எனவே இம் மக்கட் சமூகத்தின் பண்பாட்டுப் பதிவுகளை ஆவணப்படுத்த வேண்டிய கடப்பாடு ஆய்வாளர் மத்தியில் முக்கியத்துவப்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வகையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது மலையக மக்களின் தனித்துவமான பண்பாட்டை தேர்ந்தெடுக்கப்பட்ட மலையகச் சிறுகதைகளின் வழி பதிவு செய்வதாக அமைகின்றது. ஆய்வுமுறையியலாக விபரண ஆய்வு முறைமையும் பகுப்பாய்வு முறைமையும் பயன்படுத்தப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** இலக்கியம், பண்பாடு, மலையக மக்கள், சமூகம், வாழ்வியல்

## 1. அறிமுகம்

பண்பாடு என்பது ஒரு சமூகம் "வாழும் முறை" எனக் கூறலாம். பண்பாடு என்ற பதத்திற்கு அறிஞர்கள் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவை அனைத்தும் அடிப்படையில் ஒரு சமூகத்தின் வாழ்வியல்சார் அம்சங்களை விபரிப்பதாக அமைகிறது. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பண்பாட்டை மானிடவியல், சமூகவியல் நிலைப்பட்ட வாழ்வியற்களம் என விளக்கமளிக்கிறார். இங்கு சுட்டப்படும் வாழ்வியற் களம் என்பது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக அன்றாட வாழ்க்கை, உறவு முறைகள், விவாகம், பிள்ளை வளர்ப்பு, உணவு வகை, நம்பிக்கை, சடங்கு என வாழ்க்கையின் ஒவ்வொரு தருணங்களையும் கூறுகளாகப் பாகுபடுத்தி ஒவ்வொரு சமூகத்திலும் தனிப்பண்புடன் பண்பாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. மலையக மக்கட் சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல.

மலையக மக்கள் என அழைக்கப்படும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கூலிகளாக தமிழகத்திலிருந்து இலங்கையின் மத்திய பிரதேசத்திற்கு வெள்ளையர்களால் உழைப்புக்காக அழைத்துவரப்பட்ட இந்தியவம்சாவளியினர் ஆவர். தென்னிந்திய தமிழ் கிராமிய பின்னணியில் வாழ்ந்த இம் மக்கள் குழுமத்தினர், ஒரு நிலவுடைமை சமூக அமைப்பின் கீழ் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்தனர். அவர்கள் புலம்பெயர்ந்து இலங்கைக்கு வந்த பின்னர் ஒரு முதலாளித்துவ சமூக

அமைப்பிலான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறையில் பரந்துபட்ட தொழிலாளி வர்க்கமாக மாற்றப்பட்டனர். இச்சமுதாய அமைப்பு மாற்றம் மிக முக்கியமானதாகும்.[1] இவ்வாறான ஒரு சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியில் வாழும் இம் மக்கட் சமூகத்தின் வாழ்க்கை முறை இலங்கையில் வாழும் ஏனைய சமூக அமைப்பிலிருந்து வேறுபட்டும் தனித்துவமுடையதாகவும் விளங்குகின்றது.

இதுவரை காலமும் "மலையக மக்கள்" என்ற பதம் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை குறித்தாலும் இன்று இப்பதம் மலையக வம்சாவளியைச் சேர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் தொழில்களிலும் செயலாற்றுபவர்களையும் குறித்து நிற்கிறது. எனினும் இவ்வாய்வானது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பண்பாட்டை மையமாகக்கொண்டு ஆய்வு செய்யப்படவுள்ளது.

மலையக மக்கள் சமூகத்தின் இன்ப துன்பங்களை, அடிமை வாழ்க்கை முறையை, ஒடுக்கப்பட்ட உணர்வுகளை பதிவு செய்து ஒரு வரலாற்று ஆவணமாக திகழ்பவை மலையக இலக்கியங்கள். இவ் இலக்கியங்களின் வழி மலையக மக்களின் பிரச்சினைகள் பிரதான பேசு பொருளாக அமைந்தாலும் அவர்தம் பண்பாடும் ஆங்காங்கு இலக்கியங்களுக்கு உயிரோட்டத்தை அளிக்கின்றன. மலையக சமூக அமைப்பில் நிலவும் ஒரு கூட்டு வாழ்க்கை முறைமையானது, உழைப்புடன் அல்லது உற்பத்தியுடன் தம்மை சம்பந்தப்படுத்திக்கொள்ளும்போது அதன் வெளிப்பாடாக பீறிட்டு எழுகின்ற கலை இலக்கிய உணர்வுகளும் இவ்வம்சத்தினைப் பிரதிபலிப்பதாகவே அமையும்.[2] அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது **"உழைக்கப்பிறந்தவர்கள்"** சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் பாலாசங்குப்பிள்ளையின் **"ஒளி பிறந்தது"**, சி.வி.வேலுப்பிள்ளையின் **"உழைக்கப்பிறந்தவர்கள்"**, தி.ஞானசேகரனின் **"சீட்டரிசி"**, பெ.ஐயனாரின் **"லயத்து வீடு"** , மாத்தளை கார்த்திகேசுவின் **"எளிய உள்ளங்களின் பேராசைகள்"** ஆகிய சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வுக்கட்டுரையானது மலையகப் பெருந்தோட்டத்தொழிலாளர்களின் தனித்துவமான வாழ்க்கை அம்சங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை அடிப்படையகக் கொண்டு ஆய்வு செய்கிறது.

## 3. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை அம்சங்களான உணவு, தொழில், சடங்கு, பழக்கவழக்கங்கள், புழங்குப்பொருட்கள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்து திரட்டப்படும் தகவல்களை கொண்டு விபரிப்பதாக அமைகிறது. இதனால் பகுப்பாய்வு முறையையும் விபரண ஆய்வு முறையையும் பின்பற்றி இவ் ஆய்வுக் கட்டுரை முன்னெடுக்கப்படவுள்ளது.

## 4. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளில் பண்பாட்டு பதிவுகள்

### 4.0 சமூகக் கட்டமைப்பு

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கூட்டுச் சமூகமாக வாழ்வதுடன் அவர்களுக்குள் நடைபெறும் இன்ப, துன்பங்களில் ஒரு கூட்டுக்குடும்பம் போல செயற்படுகின்றனர். இவர்கள் செய்யும் பெருந்தோட்ட வேலைகள், ஒரே லயக் குடியிருப்பு வாழ்க்கை என்பன இவர்களின் கூட்டு சமூக வாழ்க்கைக்கான பின்புலமாகும். இவர்களின் கூட்டு செயற்பாட்டிற்குச் சான்றாக ''உழைக்கப் பிறந்தவர்கள்'' சிறுகதையில் வரும் ஜானகி என்ற குழந்தையின் காதுகுத்து வைபவத்தின் போது அம் மக்கள் இயங்கும் முறையைக் கொண்டு அறியலாம்.

''காது குத்தல் தொடங்கப் போகிறது. மச்சான் - மச்சாள் முறையான சிறுவர்கள் பிள்ளையைக் கேலி, பரிகாசம் செய்கிறார்கள். பந்தல் நிறையக் கேலியும், பரிகாசமும், சிரிப்பும், கலகலப்பும் நிறைந்து வழிகின்றது.''[3] தோட்டப் பகுதிகளில் இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட லயன் காம்பராக்களில் தனிக்குடித்தனமாக கணவன் - மனைவி பிள்ளைகளுடன் வாழும் இவர்கள் அதிகார உறவுகளுக்கு கீழ் கட்டுப்பட்டு வாழ நேர்ந்தது. தோட்டப் பகுதியில் வாழும் ஆண்கள்கள், சாராயம் குடிக்கும் பழக்கமுடையவர்கள். இதனால் இவர்களின் குடும்பத்தில் கணவன் தொல்லை பிரதானமான இடத்தை பெற்றுக்கொண்டது. லயன் பகுதிகளில் வாழும் ஏனைய மக்களுடன் முரண்பாடுகளும் ஏற்படுவதுண்டு. ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'' என்னும் சிறுகதையில் வரும் முத்துசாமி குடித்துவிட்டு கங்காணியுடன் முரண்பட்டபோது அவன் மனைவி கருப்பாயியும் கங்காணியும் உரையாடும் போது ஆண்களின் குடிபழக்கம் தொடர்பாக முன்வைக்கும் கருத்துக்களை நோக்குவோம்.

''என் புரு'னுக்கு வேலை நிப்பாட்டி நாலு நாளாச்சு. இந்தக் கிழம ரே'ன் அரிசியும் கிடைக்காதுங்க. மூன்று பிள்ளைக. நான் ஒருத்தி உழைச்சு என்னாங்க பண்ணமுடியும்?...''[4] என கருப்பாயி கூறியபோது, பதிலுக்கு கங்காணி ''நீ இப்படியெல்லாம் யோசிக்கிற. உன்ட புரு'ன் முத்துசாமி யோசிக்கிறானா? குடிச்சா என்னை எதுக்கு ஏசணும்?''[5] என வரும் பகுதி அதிகார உறவுகளை எதிர்த்துவிட்டு வாழமுடியாததையும் ஆண்களின் குடிப்போக்கையும் எடுத்துக்காட்டுகின்றது. இப்பகுதி ஒரு வகையில் தோட்டப்பகுதி மக்களின் இலட்சியம் இல்லாத அடக்குமுறை வாழ்க்கையை வெளிப்படுத்தி நின்றாலும் அவர்களின் வாழ்வியலில் வேரோடிவிட்ட ஓர் அம்சமாகவும் காட்டப்படுகின்றது.

**4.1 வீடமைப்பு (குடியிருப்பு)**

மலையகப் பண்பாட்டில் ''லயன்'', ''காம்பரா'' ஆகியச்சொற்கள் மிகவும் முக்கியமானது. பொதுவாக இலங்கை வாழ் ஏனைய சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தங்களின் குடியிருப்புக்களை ''வீடு'' என அழைக்கின்றனர். ஆனால் தோட்டத் தொழிலாள மக்கள் மட்டுமே தமது இருப்பிடத்தை ''காம்பரா'' என அழைக்கின்றனர். வெள்ளைக்கார துரைமார்களின் ஆட்சியில் இவர்களுக்கு வழங்கப்பட்டது வீடுகள் அல்ல. லயக்குடியிருப்பில் அடிப்படை வசதிகள் அற்ற காம்பராக்களாகும். இதனை மலையகச் சிறுகதைகளில் படைப்பாளிகள் பரவலாக எடுத்துக்காட்டியுள்ளனர். சான்றாக ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'' என்னும் சிறுகதையில் வரும் பகுதிகளை நோக்கலாம்.

''கருப்பாயி - முத்துசாமி தம்பதிகளின் தாம்பத்திய வாழ்க்கைக்கு ஒரு படி தத்துவம் கற்பித்துக்கொண்டிருக்கும் அந்தக் காம்பராவை அவனுடைய பார்வை நோட்டம் விட்டது.''[6] '''இந்திரனுக்கு ஆயிரம் கண்கள்' என்று மேட்டு லயத்து இராமன் பூசாரி அடிக்கடி சொல்வதை

ஆமோதிப்பது போல், கூரை காட்சி தந்தது. கூரையில் ஏற்பட்ட ஓட்டைகள், சென்ற வருடத்தைவிட இவ்வருடம் கூடிக்கொண்டே இருந்தது.''[7]

தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு பகுதிகளை தனித்துவமான வாழ்க்கையின் ஓர் அம்சம் என கூறினாலும் அதிகார உறவுகளின் அடக்குமுறையின் பிரதிபலிப்பாகவும் மேற்கிளம்புவதை அவதானிக்க முடிகின்றது.

**4.3 தொழில் முறை**

தோட்டப்பகுதியில் வாழும் இம் மக்களின் பிரதான தொழிலாக தேயிலைக் கொழுந்து பறிப்பதும் அதனோடு ஒட்டிய தொழில்களும் காணப்பட்டன. பெண்கள் கொழுந்து எடுப்பதும் ஆண்கள் கவ்வாத்து வெட்டும் வேலைகளிலும் தோட்ட அதிகாரிகளின் வீட்டு வேலைகளிலும் ஈடுபட்டனர். இதனை பின்வரும் சிறுகதை பகுதிகளில் நோக்கலாம்.

''கொழுந்து பறிக்கும் பெண்கள் வரிசை வரிசையாக இரண்டாம் நம்பர் மலையை நோக்கிச் செல்கின்றனர்.''[8]

''கொழுந்து மடுவத்தின் முன்னால் பகல் கொழுந்து நிறுப்பதற்காக பெண்கள் வரிசையாக நின்றனர்... அவளைப் போலவே வரிசையில் நின்றிருந்த வேறுசில பெண்களும் நெற்றி வியர்வையைத் துடைத்தும் கொங்காணியால் விசிறியும் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.''[9] என வரும் பகுதிகளில் தோட்டப் பெண்களின் தொழில் பதிவு செய்யப்படுகின்றன. ஆண்களின் தொழில்கள் தொடர்பான பதிவுகளாக, ''சீட்டரிசி'', ''லயத்து வீடு'' ஆகிய சிறுகதைகளில் இடம்பெறும் பகுதிகளை அவதானிக்க முடிகின்றது.

''பகல் சாப்பாட்டை முடித்துக்கொண்டு அவள் மீண்டும் வேலைக்குக்குப் புறப்பட்டபோதுதான் கந்தையா கவ்வாத்து முடிந்து வீட்டுக்குத் திரும்பினான்.''[10]

''கோபால் ஒருவித ஏக்கத்துடன் பால்வாளியை எடுத்துக்கொண்டு துரையின் மாட்டுப் பட்டியை நோக்கி நடக்கிறான்.''[11] என வரும் பகுதிகள் ஆண்கள் கவ்வாத்து வேலையுடன் அதிகாரவர்க்கங்களின் வீடுகளில் குறிப்பாக மாட்டுப்பட்டியில் செய்யும் வேலைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. (மாட்டுப்பட்டி மட்டுமன்றி ஏனைய வேலைகளும் இம் மக்களால் செய்யப்பட்டுள்ளது.)

**4.3 உணவு முறை**

ஒரு பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் உணவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது எமது இலக்கிய மரபு.[12] ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் மக்களின் உணவை அவர்கள் வாழும் சூழல், காலநிலை என்பன தீர்மானிக்கின்றன. மேலும் உணவை வைத்துக்கொண்டு அவர்களின் தனித்துவமான பண்பாட்டையும் அடையாளப்படுத்தலாம். அவ்வகையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உணவில் கோதுமை மா ரொட்டி, சம்பல், சோறு என்பனவும் சாயத்தண்ணி (தேநீர்), கரும்பு கருப்பட்டி என்பனவும் அவர்தம் பண்பாட்டில் வேர்விட்டுள்ளது. இதனை ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', '' லயத்து வீடு'' ஆகிய சிறுகதைகளில் வரும் பகுதிகள் பதிவு செய்கின்றன.

''கருப்பாயி பம்பரமாக சுழல்கிறாள்...இரவே பிசைந்து வைத்த கோதுமை மா அதனை ரொட்டிக்கு மீண்டும் பதமாக்கி ஒரு ரொட்டியை தட்டி எடுக்கிறாள்.''[13]

''அவள் ரொட்டியையும் சம்பளையும் அவனுக்கு முன்னால் எடுத்து வைத்தாள்.''[14]

" 'பல்ல வெலக்கிட்டு சாப்புடுங்க' பார்வதியின் குரல் சாத்தையாவைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது. ரொட்டித்துண்டையும் கரும்பு கருப்பட்டியையும் மென்றுவிட்டுக் கூரையை நோக்கினான்."[15] விசேட வைபவங்களின்போது வாழை இலையில் கறி, சோறு சமைத்து உண்ணும் வழக்கமும் இவர்களிடையே இருந்துள்ளது.

### 4.4 குழந்தை வளர்ப்பு முறை

தோட்டத் தொழிலாளப் பெண்கள் முழு நேரமும் தோட்ட வேலைகளில் ஈடுபடுவதனால் குழந்தை பராமரிப்பு பெரும் சிரமமாக இருந்துள்ளது. இதனால் இவர்கள் தங்கள் பிள்ளைகளை பிள்ளைக்காம்பராக்களில் பராமரிப்புக்கு விட்டுச் செல்கின்றனர். இதனை "எளிய உள்ளங்களின் பேராசைகள்" என்னும் சிறுகதையில் அவதானிக்க முடிகின்றது.

"குழந்தைகளுடைய பசி உணர்வுகள் ஆற்றப்பட்டு விட்டன. அவற்றுக்கான பகல் சாப்பாட்டையும் கட்டி எடுத்தாள். லயத்துக் கோடியிலே இருக்கும் பிள்ளை மடுவத்தினைக் கருப்பாயி- சக குழந்தைகள் அடைகிறார்கள். கை நொடிப்பு நேரத்திலே தற்காலிகப் பிரிவுபசாரம். சிணுங்கத்தொடங்கும் குழந்தைகளிடமிருந்து தன்னுடையப் பாசத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு மடுவம் நீங்கி காம்பரா நோக்கித் திரும்புகின்றாள்."[16]

### 4.5 பழக்கவழக்கங்கள்

தோட்டப் பகுதிகளில் வாழும் பெண்களிடையே சீட்டுப்பிடிக்கும் பழக்கம் இருந்துள்ளது. இது அவர்களின் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்வதை சீட்டரிசி என்னும் சிறுகதையின் மூலம் அறியமுடிகின்றது. குறிப்பாக இவர்கள் அரிசிச் சீட்டு, தூள் சீட்டு, மாவு சீட்டு என்பவற்றை பிடித்துள்ளனர். குடிகார கணவன்மார்களுக்குத் தெரியாமல் இச் சீட்டுகள் பிடிக்கப்பட்டன. இதனை இச்சிறுகதையில் வரும் சான்றுகளில் காணமுடிகின்றது.

"சிகப்பாயி பல வருடங்களாக சீட்டுப்பிடித்து வருகிறாள். தோட்டத்துப் பெண்களிடையே அவள் பிடிக்கும் சீட்டுகள் பிரபல்யம் வாய்ந்தவை. அரிசிச் சீட்டு, தூள் சீட்டு, மாவுச் சீட்டு என வகை வகையாகச் சீட்டுகள் பிடித்தாலும் அவள் பிடிக்கும் அரிசிச் சீட்டுக்குத்தான் கிராக்கி அதிகம்."[17]

இம் மக்கள் மத்தியில் வெற்றிலைப்போடும் பழக்கமும் அவர்களின் பண்பாட்டின் ஓர் அம்சமாக இருந்து வருகின்றது. ஆண் - பெண் இருபாலாரும் இப்பழக்கத்தைக் கொண்டவர்கள். "உழைக்கப் பிறந்தவர்கள்" சிறுகதையில் வரும் பழனி மாமன் என்னும் பாத்திரம் பாஞ்சாலி என்பவளின் வீட்டிற்குச் சென்றபோது அவரை கவனிக்கும் நடைமுறையில் வெற்றிலைப்போடும் பழக்கத்தை விபரிக்கிறார் இச் சிறுகதை ஆசிரியர். "…தாம்பளத் தட்டில் வெற்றிலைப்பாக்கும் வருகிறது. வாய் நிறைய வெற்றிலை போட்டு எச்சில் பணிக்கம் நிறையத் துப்பிவிட்டு வாயையும் துடைத்துவிட்டு தனக்குரிய பாணியில் தொடங்கினார்."[18]

"கருப்பாயி கொங்காணித் துணியைத் தலையிலே போட்டுச் சரி செய்தாள். வெற்றிலைப் பொட்டணத்தை மடியிலே கட்டிய பின்னர் கொழுந்துக் கூடையைத் தலையிலே மாட்டிக் கொள்கிறாள்."[19] மாடு, கோழி வளர்ப்புகளிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனை,

"சின்னத்தம்பியை எதிர்பார்ப்பதை போல அசை போட்டவாறு லெட்சுமி படுத்திருந்தது. லெட்சுமி அவர் வீட்டு தெய்வம். அது பால் கொடுக்கும் சாதாரண பசுவல்ல."[20]

''சாத்தையாவின் மகன் கோபால் மாட்டுப் பட்டியில் நுழையும்போது தனது வீட்டுக் கூரையின் ஓட்டைகளை நினைத்து வெதும்புவான்.''[21]

''சீட்டரிசியை கொண்டு வந்ததும் அதனை ஸ்தோப்பில் கோழியடைக்கும் மூலையில் வைத்துக் கோழிக்கூடையால் மூடிவைத்தால் பார்வதி.''[22] ஆகியப் பகுதிகளில் காணலாம்.

**4.6 சடங்கு, சம்ரதாயங்கள்**

இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சடங்கு முறைகளை நோக்கும்போது பிராமணர்கள் அல்லாத தென்னிந்திய மக்களின் சடங்கு முறைகளை ஒத்ததாகவே காணப்படுகின்றன.[21] தோட்டப்பகுதியில் பூப்பு நீராட்டு, காது குத்து வைபவம் என்பன சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றன. இக்கொண்டாட்டங்களின் போது பல்வேறு சடங்கு முறைகளும் சம்ரதாயங்களும் நாள்கோள் பார்த்து செய்யப்படுகின்றன. பொதுவாக தமிழர் பண்பாட்டில சங்க காலம் முதல் இன்றுவரை நாள்கோள் பார்த்து நேரம் குறிக்கும் வழக்கம் பண்பாட்டின் ஓர் அம்சம் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. சாதாரண கூலிகளாக அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்தாலும் தோட்ட மக்கள் தமது பண்பாட்டு பழக்கவழக்கங்களை பேணி வருபவர்கள் என்பதை ''உழைக்கப் பிறந்தவர்கள்'' சிறுகதை மிக விரிவாக பதிவு செய்துள்ளது. இச்சிறுகதையில் ஜானகி என்ற குழந்தையின் காது குத்தல் வைபவம் எவ்வாறான சம்ரதாயங்களை கொண்டுள்ளன என்பதை நோக்குவோம்.

காது குத்தலுக்கு மாமன், மச்சான் உறவு முறைகள் முக்கியப்படுத்தப்பட்டன. அருகில் உள்ள உறவினர்களுக்கு வெற்றிலைப்பாக்கு மூலம் அழைப்பும் தூரத்தில் உள்ளவர்களுக்கு 'கார்ட்' வைத்தலும் இருந்துள்ளது. வைபவத்தின் அன்றைய தினம் தாய்மாமனை கையெடுத்து கும்பிட்டு வரவேற்கும் சம்ரதாயங்களையும் சீர் வழங்கும் போது, அதனை எழுதி வைக்கும் ஒரு வழக்கமும் இவர்களிடையே இருந்துள்ளது. இதனை கதையில் வரும் ஒரு பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

''உறவினர்களின் குடும்பம் ஒவ்வொன்றும் மூன்று கொத்து அரிசி, தேங்காய், காய்கறி, காது குத்தப்படும் பிள்ளைக்கான புடவை ஆகியவற்றைச் சீராகக் கொண்டு வருவார்கள். தோட்டத்தில் எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் சீர் வரிசைகளை செய்தவர்களின் பெயர், சீரில் அடங்கிய பொருட்கள் ஆகியவற்றை விபரமாக எழுதிக்கொள்வர். ஏனெனில் தோட்டத்து மக்கள் தங்களுக்கு சீர் கொண்டு வந்தவர் வீட்டில் ஏதாவது தேவை நடந்தால், கொண்டு வரப்பட்ட சீருக்குப் பதில் சீர் எடுக்கும் போது சீரானது முதல் சீரைப் பார்க்கச் சற்றுப் பெறுமதி கூடியதாக இருக்க வேண்டும் என்பது தோட்ட மக்களின் சம்ரதாயம்.''[23] விருந்து உணவின் போது சம்பந்தி, பங்காளிகளுக்கு முதல் உரிமை வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் மொய் வழங்கும் நடைமுறையும் சம்ரதாயமாகவே பேணப்பட்டுள்ளது. குறிப்பாக சம்மந்தி மொய் அதன் பின்னர் பங்காளி மொய் வழங்கப்பட்டுள்ளது. சம்மந்திகளின் மொய் ஐம்பது ரூபாய்குறையாமலும் பங்காளிகளின் மொய் இருபது ரூபாய்க்கு குறையாமலும் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு வகையில் நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் ஒரு உத்திமுறையாக இருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. இம் மக்கள் தென்னிந்திய பகுதிகளிருந்து வந்தவர்களாகவும் அந்த வம்சாவளியினராகவும் விளங்கியமையால் அங்கு பின்பற்றப்பட்ட சம்ரதாயங்களைப் பேணுவருவதை அவதானிக்க முடிகின்றது.

**4.7 சடங்கு முறைகள்**

காது குத்தலின்போது குழந்தையை திண்ணையில் அமர வைத்து, கிழக்கு நோக்கி நின்று திருநீரு பூசப்படும். பின்னர் குழந்தையை மடியில் ஒருவர் வைத்திருக்க தாய்மாமனால் காதுகுத்தப்படும். அதன்பின்னர் தப்பு, உருமி ஆகியன குழந்தையின் செவியின் அருகில் வாசிக்கப்பட்டு அதன் அழுகை அடக்கப்படும். வைபவத்தில் பண்டாரம் என அழைக்கப்படும் பூசாரி பூசை முறைகளை ஆற்றுவார். இவ்வாறு தோட்ட மக்களின் காதுகுத்தல் வைபவம் விருந்து, மொய் என பல்வேறு சடங்கு, சம்ரதாயங்களுடன் நடைபெறும்.

விருந்தினர், உற்றார் உறவினர்களுக்கு அமர்வதற்கென மாத்து விரித்தல் முறையும் இவர்கிடையே பின்பற்றப்பட்டுகின்றன. பெண்பிள்ளைகள் வயதிற்கு வந்ததும் சடங்கு செய்து சமைத்துப் போடும் வழக்கமும் இம் மக்களிடையே பின்பற்றப்படுகின்றது. இதனை ''சீட்டரிசி'' என்னும் சிறுகதையில் வரும் ஒரு பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

''பார்வதிக்கு இரண்டாவது சீட்டுத்தான் குலுக்களுக்கலில் தெரிவானது. அந்த மாதத்தில் பூங்கோதையின் மகள் பெரியவளாகியதால் சடங்கு சுத்தி சமைச்சுப் போடுவதற்கு அந்தமாதச் சீட்டரிசியை தனக்குத் தரும்படி பூங்கோதை மன்றாடியதால் பார்வதி அந்தச் சீட்டை அவளுக்கு விட்டுக்கொடுத்தாள்.''[24] பொருளாதார நெருக்கடி இம் மக்களிடையே பிரதான பிரச்சினையாக இருந்து வந்தாலும் தமக்குரிய சடங்கு, சம்ரதாயங்களை செவ்வனே செய்யவேண்டும் என்ற எண்ணமும் இருந்து வந்துள்ளதை நன்கு அறியமுடிகின்றது.

**4.8 அலங்கார முறைகள் (வைபவத்தின் போது)**

ஒரு சமூகம் கொண்டாடும் வைபவங்கள், விழாக்கள் ஆகியவற்றில் அலங்கரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் பண்பாட்டின் ஓர் அம்சமாகும். அவை ஒரு வகையில் அவர்தம் கைவினைக் கலைகளை, அதன் நுட்பங்களை, அறிவாற்றலை புலப்படுத்தும் சமூக அடையாளமாகும். அவ்வகையில் தோட்டத் தொழிலாள மக்கள் வைபவத்தின் போது, வீட்டுச்சுவர்களுக்கு வெள்ளையடித்தல், கோலம்போடுதல், பந்தல்கள், பச்சிலைகள், கொடி மீனா, மாவிலைத் தோரணங்கள், வாழைமரங்கள், பூப்போட்ட சீலைகளால் பந்தல் அலங்காரங்கள் முதலிய அலங்கார முறைகளைப் பின்பற்றுகின்றனர். இதனை கீழ்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

''வீட்டு முன் பக்கமாக சிறிய பந்தல் பச்சிலைகளாலும், கொடி மீனாவாலும் அலங்கரிக்கப்படுகின்றது. மாவிலைத் தோரணங்கள் பந்தலின் வெளிப்பக்கத்திலும், உட்பக்கத்திலும் கட்டப்படுகின்றன. பந்தலின் நாலு மூலைகளிலும் குலை போட்ட வாழை மரங்கள் கட்டப்படுகின்றன.''[25]

பெரும்பாலும் வைபவங்களின் போது அவர்கள் வாழும் சூழலில் கிடைக்கும் இயற்கைப் பொருட்களே அலங்காரங்களுக்குப் பயன்பட்டுள்ளது.வீட்டிற்கு வெள்ளை அடித்தல் பொதுவாக தமிழ்ச் சமூகங்களில் இருக்கும் நடைமுறை. ஆனால் மேலே எடுத்துக்காட்டும் பகுதியில் அம் மக்கள் இயற்கையுடன் ஒட்டி வாழ்வதால் தங்களின் அலங்காரங்காரப் பொருட்களை இயற்கைச் சார்ந்த மூலப்பொருட்களால் பயன்படுத்தியுள்ளமை அவர்தம் பண்பாட்டின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**4.9 சாதிமுறை**

சாதி ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்திய சமுதாயத்திலிருந்து வந்தவர்கள் என்பதால் இவர்கள் மத்தியிலும் சாதி ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் போய்விடமுடியாது எனினும் ஒரே லயங்களில் வாழ வேண்டிய நிலை, மீள முடியாத பஞ்ச நிலை, எல்லோருமே கள்ளத்தோனிகள் என ஒதுக்கப்பட்ட பரிதாப நிலை ஆகியவற்றினால் தமக்குள்ளே சாதி உணர்வுகளைப் பேண முடியாத நிலைக்கு

இவர்கள் தள்ளப்பட்டிருந்தனர்.[26] எனவே மலையக மக்கள் சார்ந்து வெளிவந்த பெரும்பாலான ஆக்க இலக்கியங்களில் அவர்தம் பிரச்சினைகள் முதன்மைப்படுத்தப்பட்டதனால் சாதி தொடர்பான பதிவுகளை விரிவாக அறியமுடியவில்லை. எனினும் ஒரு சில சிறுகதைகளில் சாதிவழக்கம் இருந்துள்ளதை ஆங்காங்கு காணமுடிகின்றது.

“உழைக்கப்பிறந்தவர்கள்” என்னும் சிறுகதையில் பண்டாரம், டோபி, பார்பர், ஆச்சாரியர் என காதுகுத்து வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் பற்றி கூறப்பட்டுள்ளன. இதனை,

“தேவை நடக்கும் நாள் டோபி அப்பச்சி பூப்போட்ட சீலைகளைக்கொண்டு பந்தலை அலங்கர்ப்பார்.”[27]

“பண்டாரம், டோபி, பார்பர் அவர்களின் கூலி, காசாகவும் வேறு பொருட்களாகவும் வழங்கப்பட்டன.”[28]

“காது குத்துவதற்கு ஆசாரியாரும், தோட்டத்து பார்ப்பாரும் வருவதுண்டு.”[29]

“ஒளி பிறந்தது” என்னும் சிறுகதையில் வரும் பாலன் என்பவன் சலவைத் தொழிலாளியின் மகளைத் திருமணம் செய்வதால் அவனின் தந்தை சின்னத்தம்பியின் எதிர்ப்புக்கு ஆளாகிறான்.

“சீட்டரிசி” என்னும் சிறுகதையில் ‘டோபி லயம்’ என ஒரு தனி லயம் இருந்துள்ளதை இச்சிறுகதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதனை “டோபி லயத்துப் பெருமாயியிடம் கேட்டுப்பார்கலாமா எனப் பார்வதியின் சிந்தனை ஓடியது.”[30] என்னும் பகுதி உறுதி செய்கின்றது. பெருந்தோட்டத் தமிழரிடையே சாதி முறைமை என்பது அகச் சமூக அமைப்பினை ஒழுங்கமைத்துச் செல்கின்ற ஒரு முக்கிய காரணியாக அமைந்திருந்தது. இத் தொழிலாளிகள் தமிழக கிராமங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பொழுது, அங்கு நிலவிய கிராமச் சமூக அமைப்பையும் குறிப்பாகக் குடிமை முறையையும் இங்கும் கொண்டு வந்தனர்.[31] ஆனால் இவர்களிடையே இறுக்கமான சாதிக்கட்டுப்பாடுகளை யாழ்ப்பாண சமூக அமைப்பிலிருந்தது போல அதானிக்கமுடியவில்லை. இதற்கு முக்கிய காரணம் தோட்ட சமூகத்தில் நிலவிய பொருளாதார அடிமை முறையாகும்.

### 4.10 புழங்குப்பொருட்கள்

குறிப்பிட்ட மக்கட் சமூகம் தனது அன்றாட வாழ்க்கையிலும் விசேட காலங்களிலும் பயன்படுத்தும் பொருட்கள், ஆடை அணிகலன்கள் ஆகியன புழங்கு பொருட்கள் எனப்படும். இதனை பண்பாட்டு மானிடவியலாளர்கள் ‘பொருள்சார் பண்பாடு’ என அழைக்கின்றனர். பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள் என்று பண்பாட்டு ஆய்வாளர்கள் கூறுவர்.[32] தோட்டப்பகுதி மக்களிடையேயும் பல்வேறு பொருட்கள் பயன்பாட்டில் இருந்துவருகின்றன.அவையாவன, கொழுந்துக்கூடை, கொங்காணி, சாக்கு, வெற்றிலைப் பணிக்கம், படங்கு, பாய், தாம்பளத்தட்டு, செலவுப்பெட்டி, உருமி, மொலக்கு, ஆர்மோனியம், மங்கலப் பொருட்கள், ரொட்டித் தகரம், கேத்தில், மண்வெட்டி, கத்தி, சங்கு, பெரட்டு மணி என அடுக்கிக் கொண்டே செல்லாம்.

“அந்த லயத்து முன் சுவர்களில் வரிசையாக கொழுந்துக்கூடைகள் தொங்கிக் கொண்டிருந்தன, அவற்றின் மேற்பகுதியில் ‘இடுப்புக் கட்டி’ படங்குகள் உலர்ந்துக்கொண்டிருந்தன.”[33]

“கேத்தலின் இறக்கம், அடுப்பின் சுவாலையிலே ரொட்டி சுடும் தகடு குந்திக்கொண்டிருந்தது.”[34] என வரும் பகுதிகள் இம்மக்களின் தனித்துவமான பொருள்சார் பண்பாட்டை பதிவு செய்கிறது.

### 4.11 மொழி

இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள், முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் கல்வி மற்றும் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்குத் தமிழ்மொழியினையே

பயன்படுத்துவதுடன் இவர்களில் ஒரு பகுதி முஸ்லிம்களைத் தவிர்த்து அனைவருமே தமிழையே தாய் மொழியாகவும் ஏற்றுக்கொண்டனர். அவ்வாறான நிலையில் மலையகத் தமிழ் மக்களை மாத்திரம் எவ்வாறு அவர்கள் பயன்படுத்தும் மொழியின் மூலம் ஏனையவர்களில் இருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியும் என்பது வினாவாகிறது.[35] என்னும் கருத்து ஏற்புடையதே. எனினும் ஒரு மொழியின் பேச்சுவழக்கு சமூகத்திற்கு சமூகம் மாறுப்பட்டது என்பதை நாம் மறுக்க முடியாது. அவ்வகையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பேச்சுவழக்கு ஏனைய தமிழ்ச் சமூகங்களுடன் ஒப்பிடும்போது தனித்துவமானதாக விளங்குகின்றது. குறிப்பாக இவர்களின் பேச்சு வழக்கில் தமிழகத்தின் வட்டார மொழிகளின் செல்வாக்கு மிகுந்துள்ளது. சான்றாக சிறுகதைகளில் வரும் ஓரிரு பகுதிகளை நோக்குவோம்.

“மச்சான், இப்படியே குந்திக்கிட்டு இருந்தா சரிப்படுமா? எழுந்திரிச்சி மெதுவாக முகத்தக்கழுவிட்டுச் சாப்பிடு. ராத்திரியும் சாப்பிடாம படுத்திட்ட… பிரட்டுக்குப் போகனும். பிந்திப்போனா வேலையில்லன்னு வெட்டுவாங்க.”[36]

“ஏன் இந்தக் குடிய வுட மாட்டேங்கிறீங்க… இங்க பாருங்க, தொங்கல் காம்பராவில இருக்கிற கறுப்பாயி கம்முனாட்டிய இருந்துக்கிட்டே புள்ளயப டிக்கவச்சு இன்னிக்கு மாஸ்டர் ஆக்கிலியா…” [37] ( சீட்டரிசி, பக்.453)

“சம்பந்திகளே, பங்காளிகளே கூச்சப்படாத வாங்க. இது உங்கள் வீடுதானே.வந்து முதல் பந்தியில் உட்காருங்கள்.”[38] (உழைக்கப் பிறந்தவர்கள், பக்.31)

இவ்வுரையாடல் பகுதியில் வரும் “கம்னாட்டி”, “பங்காளி”, “பிரட்டு” முதலிய சொற்கள் அவர்களின் தனித்துவமான பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன.

இது போன்ற பல உரையாடல் பகுதிகளில் இம் மக்களின் தனித்துவமான மண்வாசனை கலந்த பேச்சு மொழியை உணர்வுபூர்வமாக சிறுகதைகளில் படைப்பாளிகள் சித்திரித்துள்ளனர்.

## 5. முடிவுரை

தொகுத்து நோக்கும்போது மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பண்பாடு அவர்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப அமைந்துள்ளதுடன், அவர்களின் சடங்கு, சம்ரதாயங்கள் அனைத்தும் தமது தாயகத்திலிருந்து கொண்டுவந்த சொத்துக்களாகவே அவர்களால் பேணப்பட்டு வந்துள்ளது. விசேடமாக அவர்கள் பேசும் மொழி, சடங்கு முறைகளில் தாயக உணர்வின் வெளிப்பாடு மேலோங்கியுள்ளது. பெண்களின் தொழிற்பாடுகள், அவர்தம் அன்றாட உழைப்பு, குடும்ப பொறுப்பு, பிள்ளை வளர்ப்பு முறை என்பனவும் ஏனைய சமூகத்தைச் சேர்ந்த பெண்களிலிருந்து அவர்களைத் தனித்துக் காட்டுகின்றது. இலங்கையில் வாழும் ஏனைய சமூக குழுக்களிலிருந்து இம்மக்கள் தாம் வாழும் புவியியல் அம்சம், தொழில் ஆகியவற்றால் வேறுப்பிரிக்கப்பட்டாலும் கொண்டாட்டங்கள், வைபவங்கள் எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். மொழி, சமயம், பண்டிகைகள் என்பன இலங்கை வாழ் தமிழர்களுடன் ஒப்பு நோக்கிப்பார்க்கும் வகையிலே விளங்குகின்றது. ஆனாலும் அவை யாவும் அவர்களின் பண்பாட்டின் அடையாளப் பதிவுகளாக வேர்விட்டுள்ளன.

**அடிக்குறிப்பு**

1. லெனின்மதிவாணன்., மலையகம் தேசியம் சர்வதேசம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2010, பக். 4.
2. மேலது, பக். 8.
3. உழைக்கப்பிறந்தவர்கள் சிறுகதைத்தொகுப்பு, ''உழைக்கப்பிறந்தவர்கள்'', துரைவி வெளியீடு, 1997, சென்னை, பக். 29.
4. மேலது, ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', பக். 51.
5. மேலது.
6. மேலது, ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', பக். 48.
7. மேலது, ''லயத்து வீடு'', பக். 164.
8. மேலது, ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', பக். 50.
9. மேலது, ''சீட்டரிசி'', பக், 444.
10. மேலது, பக். 445.
11. மேலது, ''லயத்து வீடு'', பக். 166.
12. சிவலிங்கராஜா.எஸ்., ''யாழ்ப்பாண பண்பாடு – மறந்தவையும் மறைந்தவையும்'', குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014, பக். 02.
13. உழைக்கப்பிறந்தவர்கள் சிறுகதைத்தொகுப்பு, ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', துரைவி வெளியீடு, 1997, சென்னை, பக்.48.
14. மேலது, பக். 49.
15. மேலது, ''லயத்து வீடு'', பக். 164.
16. மேலது, ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', பக். 49.
17. மேலது, ''சீட்டரிசி'', பக். 27.
18. மேலது, ''உழைக்கப் பிறந்தவர்கள்'', பக். 27.
19. மேலது, ''எளிய உள்ளங்களின் பேராசைகள்'', பக். 50.
20. மேலது, ''ஒளி பிறந்தது'', பக். 175.
21. மேலது, ''லயத்து வீடு'', பக். 166.
22. மேலது, ''சீட்டரிசி'', பக். 454.
23. மேலது, ''உழைக்கப்பிறந்தவர்கள்'', பக். 29.
24. மேலது, ''சீட்டரிசி'', 447.
25. மேலது, ''உழைக்கப் பிறந்தவர்கள்'', பக். 28.
26. இரகுநாதன்.ம., ''ஈழத்து தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்'', தென்றல் பப்லிகேசன், கொழும்பு, 2004, பக். 20.
27. உழைக்கப் பிறந்தவர்கள் சிறுகதை தொகுப்பு, ''உழைக்கப் பிறந்தவர்கள்'', துரைவி வெளியீடு, பக். 28.
28. மேலது, பக். 31.
29. மேலது, பக். 29.

30. மேலது, ‘‘சீட்டரிசி’’, பக். 446.
31. ஹரிஸ்,எஸ்,மீரா., ‘‘இலங்கை இந்திய வம்சாவளி மக்களின் பாரம்பரிய கூத்துக்கள்’’, நிர்த்தய கலாலயம் வெளியீடு, கண்டி, 2014, பக். 24.
32. சிவலிங்கராஜா.எஸ்., ‘‘யாழ்ப்பாண பண்பாடு – மறந்தவையும் மறைதநதவையும்’’, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2014.
33. உழைக்கப் பிறந்தவர்கள் சிறுகதைத் தொகுப்பு, ‘‘லயத்து வீடு’’, துரைவி வெளியீடு, 1997, சென்னை, பக்.163.
34. மேலது, ‘‘எளிய உள்ளங்களின் பேராசைகள்’’, பக். 48.
35. ஊவாமாகாண 8 வது தமிழ் சாகித்திய விழா மலர், 2002, பக். 20
36. உழைக்கப் பிறந்தவர்கள் சிறுகதைத் தொகுப்பு, ‘‘எளிய உள்ளங்களின் பேராசைகள்’’, துரைவி வெளியீடு, 1997, சென்னை, பக். 49.
37. மேலது, ‘‘சீட்டரிசி’’, பக். 453.
38. மேலது, ‘‘உழைக்கப் பிறந்தவர்கள்’’, பக். 31.

**துணைநூற் பட்டியல்**


1. லெனின்மதிவாணன்., மலையகம் தேசியம் சர்வதேசம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2010.
2. உழைக்கப்பிறந்தவர்கள் சிறுகதைத்தொகுப்பு, ‘‘உழைக்கப்பிறந்தவர்கள்’’, துரைவி வெளியீடு, சென்னை,1997.
3. சிவலிங்கராஜா.எஸ்., ‘‘யாழ்ப்பாண பண்பாடு – மறந்தவையும் மறைந்தவையும்’’, குமரன் புத்தக இல்லம், கொழும்பு,2014.
4. இரகுநாதன்.ம., ‘‘ஈழத்து தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்’’, தென்றல் பப்லிகேசன், கொழும்பு, 2004.